بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7 | இதழ் 39

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுல்அவ்வல் 2 ★ தபூக் 29 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 29 செப்டம்பர் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

خُذُوۡا مَاۤ اٰتَیۡنٰکُمۡ بِقُوَّۃٍ وَّاذۡکُرُوۡا مَا فِیۡہِ لَعَلَّکُمۡ تَتَّقُوۡنَ

**பொருள் :**

நீங்கள் இறையச்சமுடையோராகும் பொருட்டு நாம் உங்களுக்கு வழங்கியதை உறுதியாகப் பற்றிக் கொண்டு, அதிலுள்ளதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

(அல் அஃராஃப்:172)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வயதைக் கூறி அவர் இறந்துவிட்டார் என்று சில முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளார்கள். சிலமுறை தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உருவத்தோற்றத்தையும், இஸ்ராயீலி மஸீஹின் உருவத் தோற்றத்தையும் தனித்தனியாக (வேறுபடுத்தி) எடுத்துரைத்து அவர் மரணித்துவிட்டார் என்பதையும் புரிய வைக்கின்றார்கள்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இறை வேதத்தின் முப்பது வசனங்கள் நமது நிலைபாட்டிற்கு ஆதரவாக உள்ளன. சில முறை یٰعِیۡسٰۤی اِنِّیۡ مُتَوَفِّیۡکَ (ஈஸாவே! நான் உம்மை மரணிக்கச் செய்வேன். 3:56)என்று கூறியும்,சிலமுறை فَلَمَّا تَوَفَّیۡتَنِیۡ (நீ எனக்கு மரணத்தை தந்தபோது) என்று கூறியும், சில முறை

مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوۡلٌ قَدۡ خَلَتۡ مِنۡ قَبۡلِہِ الرُّسُلُ

(முஹம்மது (ஸல்) ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன்தோன்றிய அனைத்து தூதர்களும் மரணித்துவிட்டனர். 3:145) என்று கூறியும் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை உறுதிபடுத்துகிறது.

சுருக்கமாக, சிலமுறை ஒரு அம்சத்தின் அடிப்படையிலும், சிலமுறை வேறொரு வடிவிலும் இறை வசனம் விளித்து, விளித்து கூறுகிறது. அதாவது, இறையருளால் நாம் இருக்கும் நிலைபாடே உண்மையானது என்பதை இறை வசனம் பறைசாற்றுகிறது. மேலும், அதனையே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜின் இரவில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஹஸ்ரத் யஹ்யா (அலை) அவர்களுடன் பார்க்கின்றார்கள். உயிருள்ளவர் மற்றும் மரணித்தவருக்கிடையில் இருக்கும் எந்தவொரு குறிப்பான வேறுபாட்டையும் அவர்கள் இருவரைக் குறித்தும் எடுத்துரைக்கவில்லை.

சில முறை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வயதைக் கூறி அவர் இறந்துவிட்டார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளார்கள். சிலமுறை தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உருவத்தோற்றத்தையும், இஸ்ராயீலி மஸீஹின் உருவத் தோற்றத்தையும் தனித்தனியாக

இதன் தொடர்ச்சி : 12ஆம் பக்கம்

**அல்லாஹ் ஆகுமானதாக ஆக்கிய பொருட்களைத் தவிர ஏனைய அனைத்து பொருட்களும் ஹராம் (விலக்கப்பட்டவை) ஆகும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அது சரியானதல்ல. தெளிவாகவோ அல்லது சைகையாகவோ தடுக்கப்பட்ட பொருட்களைத் தவிர மற்ற அனைத்து பொருட்களும் மனிதனுக்கு ஆகுமானதாகும்**

اِنَّمَا حَرَّمَ عَلَیۡکُمُ الۡمَیۡتَۃَ وَالدَّمَ وَلَحۡمَ الۡخِنۡزِیۡرِ وَمَاۤ اُہِلَّ لِغَیۡرِ اللّٰہِ بِہٖ ۚ فَمَنِ اضۡطُرَّ غَیۡرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ اللّٰہَ غَفُوۡرٌ رَّحِیۡمٌ

பொருள்: தானாகச் செத்ததையும், இரத்தத்தையும், பன்றி இறைச்சியையும், அல்லாஹ் அல்லாத வேறு பெயர் கூறப்பட்ட பொருள்களையுமே அவன் உங்களுக்கு விலக்கியுள்ளான். ஆனால், (ஷரீஅத்திற்கு) முரண்பட்ட எண்ணமில்லாமலும், வரம்புகளை மீறுவதற்கான எண்ணம் இல்லாத நிலையிலும் (அவற்றுள் ஏதாவது பொருளை உண்பதற்குக்) கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டால், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான் (என்பதை நினைவில் கொள்க). (அந் நஹ்ல்:116)

இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் ஆகுமானதாக ஆக்கிய பொருட்களைத் தவிர ஏனைய அனைத்து பொருட்களும் ஹராம் (விலக்கப்பட்டவை) ஆகும். ஏனெனில், அல்லாஹ் எஜமானன் ஆவான். எஜமானனின் அனுமதியின்றி, எந்த ஒரு பொருளையும் பயன்படுத்துவது ஆகுமானதல்ல என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் (இந்தக் கருத்து) சரியானதல்ல. ஏனென்றால், நாம் எல்லா பொருட்களையும் மனிதனுக்காக படைத்துள்ளோம். மனிதனுக்கு தொண்டாற்றுவதற்காக படைத்துள்ளோம் என்று அல்லாஹ் கூறிவிட்டான். எனவே இந்த பொதுவானக் கட்டளையின் மூலம்

இதன் தொடர்ச்சி : 12ஆம் பக்கம்

## நபிமொழி

**உங்களில் எவரும் தமது சகோதரரின் வியாபாரத்திற்கு போட்டியாக வியாபாரம் செய்யக் கூடாது**

(2139) : ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் எவரும் தமது சகோதரரின் வியாபாரத்திற்கு போட்டியாக வியாபாரம் செய்ய வேண்டாம்.

உங்களில் எவரும் தமது சகோதரர் வரன் பேசும் இடத்தில் (போட்டிக்கு) வரன் பேச வேண்டாம்

(2140) : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

உள்ளூர் வாசி வெளியூர் வாசிக்காக வியாபாரம் செய்து கொடுப்பதையும், (பிறரை) ஏமாற்றுவதற்காக தங்களுக்குள் விலையை அதிகரிப்பதையும், ஒருவர் தமது சகோதரரின் வியாபாரத்திற்கு போட்டியாக வியாபாரம் செய்வதையும், தமது சகோதரர் வரன் பேசும் இடத்தில் (போட்டிக்கு) வரன் பேசுவதையும், ஒரு பெண் தன்னுடைய பாத்திரத்தை நிரப்பிக் கொள்ளும் எண்ணத்துடன் தனது சகோதரியை தலாக் (விவாகரத்து) செய்யுமாறு கோரிக்கை வைப்பதற்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தடை விதித்துள்ளார்கள்.

**விலையை அதிகரிப்பதற்கு தடை**

(2142) : ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நஜ்ஷ் அதாவது, வஞ்சகத்துடன் விலையை அதிகரிப்பதிலிருந்து (மோசடியாக ஏலம் விடுவதற்கு) தடை செய்துள்ளார்கள்.

குறிப்பு: உண்மையில் ஒருவரின் ஒரு பொருளை வாங்குவதற்கு எண்ணம் இல்லாதபோது, அதன் விலையை இன்னொருவரை விட அதிகம் கொடுப்பதாக வெளிப்படுத்துவது நஜ்ஷ் என்றழைக்கப்படுகிறது.

(புகாரி-தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் ரோமானியப் பேரரசிற்கு எதிராக நடைபெற்ற போர்களைப் பற்றிய குறிப்புகள்**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் படையின் மிகுதியின் காரணமாக அல்லாஹ் நமக்கு வெற்றி மற்றும் உதவியை வழங்கவில்லை. நமது நிலை என்னவாக இருந்தது என்றால், நாம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் ஜிஹாது செய்தோம். அப்போது, நம்மிடம் வெறும் இரண்டு குதிரைகள் மட்டுமே இருந்தன. இருந்த ஒட்டகத்தில் ஒவ்வொருவராக சவாரி செய்து வந்தோம். உஹது போர் நாளன்று, நாம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். நம்மிடம் ஒரேயொரு குதிரையே இருந்தது. அதில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சவாரி செய்திருந்தார்கள்.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஆகஸ்ட் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஸஹுர் மாதம் **26ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

எதிரிகளின் அக்கிரமங்களை தடுப்பதற்காக சிரியாவை நோக்கி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுப்பியிருந்த படைகளைப் பற்றி கூறப்பட்டுக் கொண்டிருந்தது. கடந்த குத்பாவில் மூன்று படைகளைப் பற்றி கூறப்பட்டுவிட்டது. நான்காவது படை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுடையதாக இருந்தது. அது தொடர்பாக (இவ்வாறு) எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில் சிரியாவை நோக்கி ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் சிரியா செல்வதற்கு முன் கஸாஆஃ எனும் இடத்தின் ஒரு பகுதியின் ஸதகாக்களை வசூல் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அதேநேரம் கஸாஆஃவின் மற்றொரு பாதி பகுதியின் ஸதகாக்களை வசூல் செய்வதற்காக ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவின் பக்கம் பல்வேறு படைகளை அனுப்புவதற்கு எண்ணம் கொண்டபோது, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை சிரியாவிற்கு அனுப்ப வேண்டும் என்பது அன்னாரின் விருப்பமாக இருந்தது. ஆனால், அன்னாரின் சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக, அதாவது மார்க்கப் புறக்கணிப்பு எனும் குழப்பத்திற்கு முடிவு கட்டுவதில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஆற்றிய சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக, அன்னார் விரும்பினால் கஸாஆஃவிலேயே தங்கியிருக்கலாம் அல்லது சிரியாவிற்கு சென்று அங்குள்ள முஸ்லிம்களின் வலிமைக்கு காரணியாக திகழலாம் என்ற அதிகாரத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு வழங்கியிருந்தார்கள். (அல்பதாயா வன் நஹாயா தொகுதி 4, பாகம் 7, பக்கம் 3, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001) (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் மொழியாக்க நூல், ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் - பக்கம் 340 பதிப்பு புக் கார்னர்ஷோரூம், ஜஹ்லம்)

ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்: அபூ அப்தில்லாஹ்வே! உமது இம்மை மற்றும் மறுமை இரண்டிற்கும் சிறந்த ஒரு பணியில் நான் உம்மை ஈடுபடுத்த விரும்புகிறேன். நீர் செய்து கொண்டிருக்கும் இந்தப் பணி (அதைவிட) உமக்கு விருப்பத்திற்குரியதாக இருந்தால் நான் உம்மை அந்தப் பணிக்கு அனுப்ப மாட்டேன்.

இதற்கு, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்: நான் இஸ்லாத்தின் அம்புகளில் ஓர் அம்பு ஆவன். அல்லாஹ்விற்கு பிறகு, தாங்கள் (ரலி) மட்டுமே அந்த அம்புகளை எய்பவராகவும், ஒன்று சேர்ப்பவராகவும் உள்ளீர்கள்.

எந்தப் பக்கம் தங்களுக்கு ஏதாவது அபாயம் இருக்குமோ, அந்தப் பக்கம் தாங்கள் அந்த அம்புகளிலிருந்து மிகவும் கடினமான, அதிக அபாயகரமான மற்றும் சிறந்த அம்பை எய்துவிடுங்கள். (தாரீகத் தபரி பாகம் இரண்டு, பக்கம் 332, தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

அதாவது, எல்லாவகையான அபாயங்களையும் எதிர்கொள்ள செல்வதற்கு நான் எல்லாவகையிலும் தயாராக உள்ளேன்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது, மக்கள் தங்களிடம் ஒன்று கூடுவதற்காக மதீனாவிற்கு வெளியில் சென்று முகாமிட்டுத் தங்கிக் கொள்ளுங்கள் என்று அன்னாருக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். குரைஷியர்களில் கண்ணியம் மிக்க ஏராளமான மக்கள் அன்னாருடன் இணைந்து கொண்டார்கள்.

சிரியாவை நோக்கி செல்ல வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு விட்ட பிறகு, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு அழைக்கப்பட்டார்கள். அன்னார் அங்கு சென்றார்கள். பின்னர், ஒரு படையை தயார் செய்யும் பொருட்டு நீங்கள் மதீனாவிற்கு வெளியே கூடாரம் அமைத்து முகாமிட்டுக் கொள்ளுங்கள். அப்போதுதான் மக்கள் தங்களிடம் ஒன்று கூடுவார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் (மதீனாவிலிருந்து) புறப்படுவதற்கு எண்ணம் கொண்டபோது, அன்னார், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து விடைபெற தொடங்கினார்கள். அப்போது, **ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அம்ரே! நீர் கருத்துகள் மற்றும் அனுபவத்தில் உயர்ந்தவர் ஆவீர். மேலும் போரைப் பற்றிய அகப்பார்வையும் பெற்றுள்ளீர். நீர் உமது சமுதாயத்தின் கண்ணியமிக்கவர்கள் மற்றும் முஸ்லிம் நல்லடியார்களுடன் செல்கின்றீர். மேலும், உமது சகோதரர்களை சென்று சந்திப்பீர். எனவே, அவர்களின் நலன் நாடுவதில் எந்தக் குறைவும் செய்யாதீர்.**

**அவர்களிடம் நல்ல ஆலோசனைகளை செய்வதை நிறுத்திவிட வேண்டாம். உம்மிடம் ஏதாவது நல்ல திட்டம் இருக்கும் என்றால், அதை நிச்சயம் பயன்படுத்தவும்.**

அப்போது, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் தங்களின் எண்ணத்தை உண்மையாக்கிக் காட்டினால் அது எவ்வளவு சிறந்தது! மேலும் என்னைக் குறித்த தங்களின் எண்ணம் தவறானதாக ஆகிவிடாமல் இருக்கட்டுமாக!

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் தமது படையுடன் புறப்பட்டு சென்றுவிட்டார்கள். அன்னாரின் படையின் எண்ணிக்கை ஆறாயிரம் மற்றும் ஏழாயிரத்திற்கு இடைப்பட்டதாக இருந்தது. பாலஸ்தீனம் அன்னார் சென்று அடைய வேண்டிய பயண இலக்காக இருந்தது.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஓராயிரம் முஜாஹித்களை உள்ளடக்கிய படையை தயார் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களின் தலைமையில் ரோமை நோக்கி முன்னேற்பாடாக படையை அனுப்பி வைத்தார்கள். அந்தப் படை ரோமானியர்களுடன் சென்று மோதியது. மேலும், எதிரிகளின் வலிமையை அழித்து அவர்களுக்கெதிராக வெற்றி பெற்றது. மேலும், சில கைதிகளுடன் திரும்பி வந்தது.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அந்த கைதிகளிடம் விசாரணை மேற்கொண்டார்கள். அதன்மூலம் ரோமானியப் படை ருவைஸ் என்பவனின் தலைமையில் முஸ்லிம்கள் மீது திடீர் தாக்குதல் நடத்துவதற்கான தயாரிப்பில் உள்ளது என்பது தெரிய வந்தது. அந்த தகவல்களின் அடிப்படையில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் தமது படையை ஒழுங்குப்படுத்தினார்கள். மேலும் ரோமானியர்களின் தாக்குதல் நடந்தபோது, முஸ்லிம்கள் அந்த தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்றுவிட்டார்கள். மேலும், ரோமானியப் படையை திரும்பி செல்லும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கிவிட்டார்கள். அதன் பிறகு, அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தி எதிரியின் வலிமையை அழித்துவிட்டார்கள். மேலும், எதிரியை போர் மைதானத்தை விட்டு தப்பி ஓடும் படி நிர்பந்தித்துவிட்டார்கள். இஸ்லாமியப் படை அவர்களை பின்தொடர்ந்து சென்றது. ரோமானியர்களின் ஆயிரக்கணக்கான படை வீரர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் அந்தப் போர் முடிவுக்கு வந்தது. (அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்கள் மொழியாக்கம் செய்த ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கையும், சாதனைகளும் எனும் நூல், பக்கம் 448-449, அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட் பாகிஸ்தான்)

இந்தப் படைகளை அனுப்பி வைத்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டார்கள். அல்லாஹ் இந்தப் படைகளின் மூலம் முஸ்லிம்களுக்கு ரோமானியர்களுக்கெதிராக வெற்றியை வழங்குவான் என்ற முழுமையான நம்பிக்கை அன்னாருக்கு இருந்தது. அதற்கு காரணம் என்னவென்றால், அந்தப் படையில் ஓராயிரத்திற்கும் அதிகமான முஹாஜிர் மற்றும் அன்சார் சஹாபிகள் பங்குபெற்றிருந்தனர். அந்த சஹாபிகள் எல்லா சந்தர்ப்பத்திலும் எல்லையற்ற நன்றியுணர்விற்கான சான்றை வழங்கியிருந்தார்கள். அந்த சஹாபிகள் இஸ்லாத்தின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு உறுதுணையாக இருந்து போர்களில் பங்குபெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பத்ர் போர் நாளன்று, அல்லாஹ்வே! இன்று நீ இந்த சிறிய கூட்டத்தை அழித்துவிட்டால் பின்னர் எதிர்காலத்தில் ஒருபோதும் பூமியில் உனது இறைவணக்கம் நடைபெறாது என்று எந்த பத்ர்போர் வீரர்களைக் குறித்து அல்லாஹ்விடம் முறையிட்டு இருந்தார்களோ அந்த பத்ர்போர் வீரர்களும் அந்தப் படையில் இருந்தனர். (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீகே அக்பர் (ரலி) எனும் நூல் மொழிபெயர்ப்பாளர்-ஷேக் முஹம்மது பானிபதீ அவர்கள், பக்கம் 322, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர் லாஹூர் 2004)

அடுத்து எழுதப்பட்டுள்ளது: ரோமானியப் பேரரசர் ஹிர்குல் அந்த நாட்களில் பாலஸ்தீனத்தில் இருந்தான். முஸ்லிம்களின் தயாரிப்புகளைக் குறித்து அவனுக்கு தகவல் கிடைத்தபோது, அவன் அந்தப் பகுதியின் தலைவர்களை ஒன்றுகூட்டினான். மேலும் அவர்களுக்கு முன்னால் உணர்ச்சிபொங்க சொற்பொழிவு நிகழ்த்தி அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராக போர்புரிவதற்கு இணங்க வைத்தான். பட்டினி கிடக்கூடிய, நிர்வாணமான, நாகரீகமற்ற இந்த மக்கள் அரேபிய பாலைவனத்தில் இருந்து வெளியேறி உங்கள் மீது தாக்குதல் நடத்த விரும்புகின்றனர் என்று அவன் முஸ்லிம்களைக் குறித்து கூறினான். இனி ஒருபோதும் அவர்கள் உங்கள் பக்கம் பார்ப்பதற்கு துணிவு கொள்ளமுடியாதபடி நீங்கள் அவர்களுக்கு சிறப்பான பதிலடி கொடுங்கள். போர் தளவாடங்கள் மற்றும் படைவீரர்கள் மூலமாக உங்களுக்கு முழுமையான உதவி செய்யப்படும். உங்கள் மீது அமீர்மார்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கு உள்ளத்தாலும், உயிராலும் கட்டுப்படுங்கள். வெற்றி உங்களுடையதாக இருக்கும் என்றும் அவன் கூறினான். ஹிர்குல் அங்குள்ள மக்களை அரேபியர்களுக்கு எதிராக, முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடும் வகையில் அவர்களிடம் இவ்வாறு சொற்பொழிவு நிகழ்த்தினான். பாலஸ்தீன மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்துவிட்டு ஹிர்குல் டமாஸ்கஸ் வந்தடைந்தான். அங்கிருந்து கம்ஸ் மற்றும் அந்தகியா சென்றடைந்தான். மேலும், பாலஸ்தீனத்தைப் போன்று அந்தப் பகுதியிலும் அவன் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றி, அங்குள்ள மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக போர் புரிவதற்கு தயார் செய்தான். மேலும், அவன் சுயமே அந்தகியாவை தலைமையகமாக ஆக்கிக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக போரிடுவதற்கு தயாரிப்புகளை செய்யத் தொடங்கினான்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) என்ற நூல்-பக்கம் 347, மொழிபெயர்ப்பாளர்-ஷேக் முஹம்மது அஹ்மது பானிபதீ, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர்ஸ் லாஹூர் 2004)

சிரியாவில் ரோமானியர்களின் இரண்டு படைகள் இருந்தன. ஒன்று, பாலஸ்தீனத்திலும், மற்றொன்று அந்தகியாவிலும் இருந்தன. மேலும், இந்த இரு படைகளும் கீழ்கண்ட இடங்களில் தமது தலைமையகத்தை அமைத்திருந்தன. ஒன்று அந்தகியா: இது ரோமானியர்களின் ஆட்சியில் சிரியாவின் தலைநகரமாக இருந்தது. இரண்டாவது, கின்னஸ்ரீன்: இது சிரியாவின் எல்லைப் பகுதியாகும். இது வடமேற்கில் பாரசீகத்திற்கு எதிர்புறத்தில் உள்ளது. மூன்றாவது (தலைமையகம்) ஹிம்ஸ்: இது சிரியாவின் எல்லைப்புற பகுதியாகும். இது வடகிழக்கில் பாரசீகத்திற்கு எதிர்புறத்தில் உள்ளது. நான்காவது(அம்மான்):பல்காஃ பகுதியின் தலை நகரம் ஆகும். இங்கு, வலிமையான, பாதுகாப்பான கோட்டை இருந்தது. ஐந்தாவது(தலைமையகம்) அஜ்னாதைன்: இது பாலஸ்தீனத்தின் தெற்கில் ரோமானியப் படையின் தலைமையகமாக இருந்தது. இது அரேபிய நகரங்களின் கிழக்கிலும், மேற்கு எல்லைப்புற பகுதியிலும், எகிப்திய எல்லைப் பகுதிகளிலும் இணைந்திருந்தது. ஆறாவது (தலைமையகம்) கைஸாரிய்யா: இது பாலஸ்தீனத்தின் வடக்கில் ஹீஃபாவிலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அதன் இடிபாடுகள் இன்று வரை எஞ்சியுள்ளன. ரோமானியர்களின் உயர் தலைமையகம் அந்தகியா அல்லது ஹிம்ஸ் ஆக இருந்தது. (அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்களின் மொழிபெயர்ப்பு நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கையும், சாதனைகளும், பக்கம் 450, அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான்கட், பாகிஸ்தான்)

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, ஹிர்குலிற்கு இஸ்லாமியப் படைகளின் வருகை குறித்த செய்தி கிடைத்தபோது, அவன் முதலில் தமது சமுதாயத்திற்கு போரிலிருந்து விலகியிருப்பதற்கான ஆலோசனையை வழங்கினான். மேலும், அவன் கூறினான்:

எனது ஆலோசனை

என்னவென்றால், நீங்கள் முஸ்லிம்களுடன் சமாதானம் செய்துகொள்ளுங்கள். இறைவன் மீது ஆணையாக! நீங்கள் அவர்களுடன் சிரியாவின் பாதி அளவிலான விளைச்சலுக்கு சமாதானம் செய்து கொண்டால், மேலும் பாதி விளைச்சலும், ரோமின் பகுதிகளும் உங்கள் வசம் இருந்தால், அது சிரியாவின் அனைத்து பகுதிகளையும், ரோமின் பாதி பகுதியையும் அவர்கள் கைப்பற்றிக் கொள்வதை விட சிறந்தது ஆகும். ஆனால், ரோம் வாசிகள் எழுந்து சென்றுவிட்டனர். அவனது கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அவன் அவர்களை ஒன்றுகூட்டி ஹிம்ஸிற்கு அழைத்து சென்றான். மேலும், அங்கு அவன் இராணுவத்தையும், படைவீரர்களையும் தயார் செய்ய தொடங்கிவிட்டான். ஹிம்ஸிற்கு பிறகு, ஹிர்குல் அந்தகியாவிற்கு சென்றான். அவனிடம் ஏராளமான படை இருந்தது. எனவே, முஸ்லிம்களின் படையின் எல்லாப் பகுதியையும் தமது எதிர்தரப்பின் மூலம் பலவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக, முஸ்லிம்களின் ஒவ்வொரு படைக்கு எதிராகவும் தனித் தனியான படையை அனுப்புவதற்கு அவன் எண்ணம் கொண்டான். ஆக, அவன் தனது சகோதரனான தஸாரிக்கிற்கு 90 ஆயிரம் படை வீரர்களை கொடுத்து, ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களை எதிர்கொள்ள அனுப்பி வைத்தான். மேலும், ஜர்ஜஃ பின் தூஸர்வை ஹஸ்ரத் யஸீத் பின் அபூஸுஃப்யான் (ரலி) அவர்களை எதிர்கொள்வதற்கு அனுப்பி வைத்தான். அதேபோன்று, கைகார் பின் நஸ்தூவ் என்பவனிடம் 60 ஆயிரம் படைவீரர்களை கொடுத்து, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை எதிர்கொள்ள அனுப்பி வைத்தான். ஹஸ்ரத் ஷூரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களை எதிர்கொள்வதற்காக துராகிஸை அனுப்பி வைத்தான். (அல்காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 255, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:

ரோமானியப் பேரரசன் ஹிர்குல் அந்தகியா என்று கூறப்படும் சிரியாவின் ஓர் ஊரில் வந்து தங்கியிருப்பதாகவும், தமது ஆட்சியின் கீழ் இருக்கும் மக்களில் நபர்களை ஒன்றுதிரட்டி வருவதற்கு ஆட்களை அனுப்பியுள்ளதாகவும் எனக்கு தகவல் கிடைத்துள்ளது. எனவே, கடினமான எல்லா வழிப்பாதைகளையும், எளிமையான பாதைகளையும் கடந்தவாறு ஹிர்குலிடம் மக்கள் வந்துள்ளனர். எனவே தாங்கள் இது குறித்து முடிவு எடுப்பதற்காக தங்களுக்கு இந்த தகவலை அனுப்புவதை உகந்ததாக நான் கருதினேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் அந்த கடிதத்திற்கு பதில் இவ்வாறு எழுதினார்கள்:

உங்கள் கடிதம் எனக்கு கிடைத்தது. மேலும் ரோமானிய பேரரசனைப் பற்றி நீங்கள் எழுதியிருந்த விஷயத்தை நான் புரிந்து கொண்டேன். அவன் அந்தகியாவில் தங்கியிருப்பது என்பது அவனுடைய மற்றும் அவனது கூட்டாளிகளின் தோல்வியாகும். மேலும் அதில் அல்லாஹ்வின் புறமிருந்து உங்களுக்கும், முஸ்லிம்களுக்கும் வெற்றி உள்ளது. எனவே, பதற்றமடைவதற்கு ஒன்றும் இல்லை. ஹிர்குல், தமது ஆட்சியின் கீழ் உள்ள மக்களை ஒன்றுதிரட்டுவதாகவும், பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஒன்றுகூடிவருவதாகவும் நீங்கள் எழுதியுள்ளீர்கள். அவன் அவ்வாறு செய்வான் என்பது நானும், நீங்களும் முன்னரே அறிந்த விஷயம் தான். ஏனென்றால், எந்தவொரு சமுதாயமும் போர்புரியாமல் தமது அரசரை கைவிடுவதுமில்லை. தமது அரசாங்கத்திடமிருந்து வெளியேறுவதுமில்லை.

தொடர்ந்து அன்னார் (ரலி) எழுதினார்கள்: அல்ஹம்துலில்லாஹ். நான் இந்த விஷயத்தை அறிந்துள்ளேன். அதாவது, எதிரி எந்த அளவிற்கு வாழ்வின் மீது நேசம் கொண்டுள்ளானோ, அதே அளவில் அவர்களுடன் போர் புரியக்கூடிய ஏராளமான முஸ்லிம்கள் மரணத்தின் மீது நேசம் கொண்டுள்ளனர். மேலும், போரில் அல்லாஹ்விடம் மகத்தான நற்கூலிக்கு நம்பிக்கை வைத்துள்ளனர். மேலும், அவர்களுக்கு கன்னிப் பெண்கள் மீதும் விலையுயர்ந்த செல்வங்கள் மீதும் எவ்வளவு நேசம் உள்ளதோ அதைவிட அதிகமாக முஸ்லிம்கள் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதில் நேசம் வைத்துள்ளனர். அவர்களில் ஒரு முஸ்லிம் போரின் தருணத்தில் ஆயிரம் இணைவைப்பாளர்களை விட சிறந்தவர் ஆவார்.

நீர் உமது படையுடன் அவர்களுடன் மோதும். உம்மிடம் இருந்து மறைந்துள்ள முஸ்லிம்களைக் குறித்து கவலையடைய வேண்டாம். நிச்சயமாக, எவனுடைய புகழ் உயர்ந்ததோ அவன் உம்முடன் இருக்கின்றான். அதுமட்டுமல்லாமல், நான் உமது உதவிக்காக மக்களை அனுப்புகின்றேன். அதாவது கூடுதல் படையை அனுப்புகிறேன். அது உமக்கு போதுமானதாக இருக்கும். மேலும் அதன் பிறகு, இன்ஷா அல்லாஹ் இன்னும் அதிகமான படையின் தேவைக்கான விருப்பம் இருக்காது. வஸ்ஸலாம்.

(தாரீகுல் குமைஸ் தொகுதி3, பக்கம் 212-213, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2009)

அதேபோன்று, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் கடிதமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவருக்கு பதில் வழங்கியவாறு இவ்வாறு எழுதினார்கள்:

உங்கள் கடிதம் எனக்கு கிடைத்தது. அதில், ரோமானியர்கள் படையை திரட்டி வருவதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். எனவே, இதனை நினைவிற் கொள்ளவும். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் படையின் மிகுதியின் காரணமாக அல்லாஹ் நமக்கு வெற்றி மற்றும் உதவியை வழங்கவில்லை. நமது நிலை என்னவாக இருந்தது என்றால், நாம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் ஜிஹாது செய்தோம். அப்போது, நம்மிடம் வெறும் இரண்டு குதிரைகள் மட்டுமே இருந்தன. இருந்த ஒட்டகத்தில் ஒவ்வொருவராக சவாரி செய்து வந்தோம். உஹது போர் நாளன்று, நாம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். நம்மிடம் ஒரேயொரு குதிரையே இருந்தது. அதில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சவாரி செய்திருந்தார்கள். ஆனால், நிலைமை அவ்வாறு இருந்தபோதிலும், அல்லாஹ் நமக்கு எதிரியின் மீது வெற்றியை வழங்கினான். மேலும் உதவி செய்து வந்தான்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள். பாவத்தின் மீது மிக அதிகமாக பகைமை கொண்டவரே அல்லாஹ்விற்கு மிக அதிகமாக கட்டுப்பட்டவர் ஆவார். நீங்களும் அல்லாஹ்விற்கு கட்டுப்படுங்கள். மேலும், உங்களது தோழர்களுக்கும் இறைக் கட்டளைக்கு கட்டுப்படுவதற்கு கட்டளையிடுங்கள்.

(அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்களின் நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கையும், சாதனைகளும் பக்கம் 452-453, அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான்கட் பாகிஸ்தான்)

ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அங்குள்ள நிலவரங்களை எழுதியவாறு உதவி கோரினார்கள். அதற்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (இவ்வாறு) எழுதினார்கள்:

அவர்களுடன் உங்களுக்கு மோதல் நிகழும்போது, நீங்கள் உங்களது தோழர்களை அழைத்துக் கொண்டு அவர்களை கடுமையாக தாக்குங்கள். மேலும் அவர்களுடன் போரிடுங்கள். அல்லாஹ் உங்களை இழிவுபடுத்த மாட்டான். அல்லாஹ்வின் கட்டளையினால், சிறியக் கூட்டம் பெரும் கூட்டத்தை வெற்றிக் கொண்டுவிடுகின்றது என்று அல்லாஹ் எமக்கு செய்தி வழங்கியுள்ளான். அவ்வாறு இருந்தும் கூட, நான் உங்களுக்கு முஜாஹித்களுக்கு மேல் முஜாஹித்களை அனுப்புகிறேன். எந்த அளவுக்கு என்றால் அவர்கள் உமக்கு போதுமானவர்களாக இருப்பார்கள். நீங்கள் மேற்கொண்டு படையின் தேவையை உணர மாட்டீர்கள். இன்ஷா அல்லாஹ். வஸ்ஸலாம்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதில் கையெழுத்திட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தை ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்களிடம் கொண்டு செல்வதற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் குர்த் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். மேலும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அன்னாரின் கடிதத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னார் (ரலி) ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்களிடம் சென்றடைந்தார்கள். மேலும், அந்தக் கடிதத்தை முஸ்லிம்களுக்கு முன்னால் வாசித்தார்கள். அதனால் முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (தாரீகுல் குமைஸ் தொகுதி3, பக்கம் 213, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2009)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹாஷிம் பின் உத்பா அவர்களை அழைத்தார்கள். மேலும் அன்னாரிடம், ஹாஷிமே! நிச்சயமாக, நீர் மிகவும் நற்பேறு பெற்ற நபர் ஆவீர். அதாவது, எவர்கள் மூலமாக உம்மத்(சமுதாயம்) தனது இணைவைப்பாளர்களாகிய எதிரிக்கு எதிராக ஜிஹாது செய்வதற்கு உதவி பெற்று வருகிறதோ அந்த மக்களை நீர் சார்ந்தவர் ஆவீர். மேலும் உமது நலம் விரும்புதல்,நல்ல ஆலோசனை, தூய்மை, போர்த் திறமைகள் மீது ஆட்சியாளர்களுக்கு நம்பிக்கை உள்ளது. இது உமது பெரும் நற்பேறு ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அன்னாரிடம் அதாவது ஹாஷிமிடம் கூறினார்கள்:

முஸ்லிம்கள் எனக்கு கடிதம் எழுதி, தமது எதிரிகளாகிய நிராகரிப்பாளர்களுக்கு எதிராக உதவி கோரினார்கள். எனவே, நீர் உமது தோழர்களை அழைத்துக் கொண்டு அவர்களிடம் செல்வீராக. நான் உம்முடன் செல்வதற்காக மக்களை தயார் செய்கிறேன். நீர் இங்கிருந்து புறப்பட்டுவிடும். எந்த அளவுக்கு என்றால் நீர் அபூஉபைதா (ரலி) அவர்களை சென்றடைந்துவிட வேண்டும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில் எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்தார்கள். மேலும், கூறினார்கள்:

அம்மா பஃது! நிச்சயமாக, உங்கள் முஸ்லிம் சகோதரர்களில் சிலர் நலமுடன் உள்ளார்கள். சிலர் காயமுற்றுள்ளனர். அவர்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அல்லாஹ், எதிரிகளின் உள்ளங்களில் அவர்கள் மீதான மதிப்பச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றான். அவர்கள் தமது கோட்டைகளில் அடைக்கலம் பெற்று அவற்றின் கதவுகளை அடைத்துவிட்டனர்.

முஸ்லிம்களிடமிருந்து தூதுவர் இந்த செய்தியை கொண்டு வந்துள்ளார். அதாவது, ரோமானியப் பேரரசன் ஹிர்குல், அவர்களுக்கு முன்னால் இருந்து தப்பியோடி சிரியாவின் மூலையில் உள்ள ஓர் ஊரில் அவன் அடைக்கலம் பெற்றுள்ளான்.

அவர்கள் நமக்கு இந்தச் செய்தியை அனுப்பியுள்ளனர். அதாவது, ஹிர்குல் இந்த இடத்திலிருந்து மாபெரும் படையை முஸ்லிம்களுக்கு எதிராக போரிட அனுப்பி வைத்துள்ளான்.

உங்களது முஸ்லிம் சகோதரர்களின் உதவிக்காக உங்களது படையை அனுப்பி வைப்பது எனது எண்ணமாகும். அல்லாஹ் அவர்களின் மூலமாக அவர்களின் பின்பக்கத்தை வலிமையாக்கி விடுவான். அதாவது, இந்தப் படையின் மூலமாக முஸ்லிம்களின் பின்புறத்தை மிகவும் பலப்படுத்திவிடுவான். மேலும், எதிரியை இழிவுபடுத்துவான். மேலும் அவர்களின் உள்ளத்தில் அதன் மதிப்பச்சத்தை ஏற்படுத்திவிடுவான். அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிவானாக. ஹாஷிம் பின் உத்பாவுடன் தயாராகி விடுங்கள். மேலும், அல்லாஹ்விடம் நற்கூலி மற்றும் நன்மைக்கான நம்பிக்கையை வையுங்கள். நீங்கள் வெற்றியடைந்துவிட்டால் வெற்றியும், போர்செல்வங்களும் கிடைக்கும். ஒருவேளை நீங்கள் (போரில்) மடிந்துவிட்டால் பின்னர் நீங்கள் ஷஹாதத்தையும், அற்புதத்தையும் பெறுவீர்கள்.

பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வீட்டிற்கு வந்தார்கள். மேலும், மக்கள் ஹாஷிம் பின் உத்பா அவர்களிடம் ஒன்றுகூடினார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அந்த எண்ணிக்கை ஓராயிரத்தை எட்டிவிட்டபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அந்த மக்களுக்கு புறப்பட்டு செல்லும்படி கட்டளை வழங்கினார்கள். ஹாஷிம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள். மேலும் விடைபெற்றார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்:

ஹாஷிமே! நாங்கள் பெரியவர்கள் மற்றும் முதியவர்களின் கருத்துகளிலிருந்தும் ஆலோசனையிலிருந்தும், அழகிய திட்டங்களிலிருந்தும் பயன்பெற்று வந்தோம். மேலும், இளைஞர்களின் பொறுமை, ஆற்றல், வீரம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து வந்தோம். மேலும் அல்லாஹ் உம்மிடம் இந்த அனைத்து பண்புகளையும் ஒன்றுகூட்டிவிட்டான். நீர் தற்போது இளம் வயதுடையவரும், நன்மையின் பக்கம் முன்னேறக்கூடியவரும் ஆவீர். எதிரியுடன் மோதும்போது, நன்றாக மோதவும். பொறுமையை வெளிப்படுத்தவும். நிலைவிற் கொள்ளவும். அல்லாஹ்வின் வழியில் நீர் எந்த அளவு நடந்தாலும், என்ன செலவு செய்தாலும், மேலும் உமக்கு ஏற்படும் தாகம், பசி ஆகியவற்றிற்கு கூலியை அல்லாஹ் உங்களது செயல்பதிவேட்டில் நற்செயல்களை எழுதிவிடுவான். அல்லாஹ் நன்மை செய்யக்கூடியவர்களுக்கான நற்கூலியை வீணாக்க மாட்டான்.

ஹாஷிம் கூறினார்:

அல்லாஹ் எனக்கு நன்மையை விரும்பியிருந்தால் என்னுடன் அவ்வாறே செய்வான். நானும் அவ்வாறே செய்வேன். அல்லாஹ்தான் ஆற்றலும், வலிமையும் வழங்குகின்றான். நான் கொல்லப்பட்டால் நான் அவர்களுடன் போரிடுவேன். மீண்டும் அவர்களுடன் போரிடுவேன். பின்னர் மீண்டும் அவர்களுடன் போரிடுவேன். பின்னர் அவர் கூறினார்: நான் கொல்லப்படவில்லையென்றால், நான் அவர்களுடன் மீண்டும், மீண்டும் போரிடுவேன் என்று நான் நம்புகிறேன்.

அல்லது அவர் இவ்வாறு கூறினார்:

நான் கொல்லப்பட வேண்டும். நான் மீண்டும், மீண்டும் கொல்லப்பட வேண்டும் என்பது எனது ஆசையாகும். இவை இரண்டு அறிவிப்புகளாகும்.

பின்னர், அவரது சிறிய தந்தை ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்:

எனது அண்ணன் மகனே! நீ என்ன அம்பு எய்தாலும், என்ன தாக்குதல் நடத்தினாலும் அதன் நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியாக இருக்க வேண்டும். நீ மிக விரைவில் உலகிலிருந்து விடை பெற இருக்கின்றாய். மேலும் விரைவில் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி செல்ல இருக்கின்றாய் என்பதை அறிந்து கொள். மேலும், உலகிலிருந்து மறுமை வரை நீர் எடுத்து வைத்த உண்மையின் கால்தடம் உம்முடன் இருக்கும் அல்லது நீர் செய்த நற்செயல்கள் உம்முடன் இருக்கும்.

ஹாஷிம் கூறினார்: எனது சிறிய தந்தையார் அவர்களே! தாங்கள் என்னைப் பற்றி இந்த விஷயத்தில் அச்சமற்றவராக இருங்கள். எனது தங்குதலும், பயணமும், காலை, மாலையில் இடம் பெயர்தலும், எனது முயற்சியும், படையை ஆயத்தப்படுத்துவதும், மேலும் எனது ஈட்டியால் எதிரியை காயப்படுத்துதலும், எனது வாளால் நான் தாக்குவதும், மக்களுக்கு காட்டுவதற்காக இருக்கும் என்றால் பின்னர் நான் நஷ்டவாளிகளைச் சார்ந்தவனாக இருப்பேன்.

அதாவது, எனது ஒவ்வாரு அமலும் அல்லாஹ்விற்காகவே இருக்கும். மக்களுக்காக இருக்காது.

பின்னர், அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து புறப்பட்டுச் சென்றார். மேலும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை சென்றவடைதற்குரிய பாதையில் பயணித்தார். எந்த அளவுக்கு என்றால், அவர் அன்னாரை சென்றடைந்தார். அவர் சென்றடைந்ததும் முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும், ஒருவர் மற்றவரிடம், அவரது வருகையின் நற்செய்தியை பரிமாறிக் கொண்டனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்மை சிரியா ஜிஹாதில் அனுப்ப விரும்புகிறார்கள் என்ற தகவல் ஹஸ்ரத் சயீத் பின் ஆமிர் பின் ஹிஸ்யம் (ரலி) அவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேலும் ஒரு படையை தயார் செய்து கொண்டிருந்தார்கள். அந்தப் படை தனது தலைமையில் செல்லும் என்பது ஹஸ்ரத் சயீத் (ரலி) அவர்களின் எண்ணமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், அன்னாருக்கு இந்த செய்தி கிடைத்தது. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சற்று தாமதித்து விட்டார்கள். சில நாட்கள் வரை அவருக்கு தெரியப்படுத்துவதிலிருந்து விலகியிருந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் சயீத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும், கூறினார்கள்:

அபூபக்ரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் என்னை ரோமானியர்களை நோக்கி அனுப்ப எண்ணம் கொண்டுள்ளதாக எனக்கு தகவல் கிடைத்தது. ஆனால், தாங்கள் அமைதியாக இருப்பதை நான் காண்கின்றேன். என்னைப் பற்றி தங்களது உள்ளத்தில் என்ன எண்ணம் உள்ளது? என்பதை நான் அறியேன். தாங்கள் என்னைத் தவிர்த்து வேறு ஒருவரை அமீராக்கி அனுப்ப விரும்பினால் அவருடன் என்னை அனுப்புங்கள். எனக்கு அதை விட மகிழ்ச்சிக்குரிய விஷயம் வேறு எதுவும் இருக்காது. தாங்கள் எவரையும் அனுப்ப விரும்பவில்லையென்றால், நான் ஜிஹாத் செய்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளேன். நான் முஸ்லிம்களுடன் சென்று இணைவதற்கு தாங்கள் எனக்கு அனுமதி தாருங்கள். அல்லாஹ் தங்கள் மீது கருணை செய்வானாக! ரோமானியர்கள் மாபெரும் படையை ஒன்றுதிரட்டியுள்ளதாக என்னிடம் கூறப்பட்டது.

அப்பொழுது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஸயீத் பின் ஆமீரே! கருணை காட்டுபவர்களில் எல்லாரையும் விட அதிகமாக கருணைகாட்டுவன் உம் மீது கருணை காட்டட்டுமாக! நான் உம்மைக் குறித்து அறிந்தவரை, விருந்து உபசரிப்பு செய்யக்கூடியவர்கள், உறவுகளைப் பேணக் கூடியவர்கள், அதிகாலை நேரத்தில் தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்கள், அதிகமாக அல்லாஹ்வை நினைவுக் கூறக் கூடியவர்கள் போன்ற மக்களை சார்ந்தவராகவே நீர் இருக்கின்றீர்.

அப்போது, ஹஸ்ரத் ஸயீத் (ரலி) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:

அல்லாஹ் தங்கள் மீது கருணை காட்டுவானாக! என் மீது இதைவிட அதிகமாக அல்லாஹ்வின் கருணைகள் உள்ளன. அது அவனது அருளும் கருணையுமே ஆகும். இறைவன் மீது ஆணையாக! நான் தங்களைக் குறித்து அறிந்தவரை, தாங்கள் உண்மையான விஷயத்தை மிகத் தெளிவாக எடுத்துரைக்கூடியவரும், நீதியில் உறுதியாக நிலை நிற்பவரும், நம்பிக்கையாளர்கள் மீது மிகவும் கருணை காட்டக்கூடியவரும், நிராகரிப்பாளர்களுக்கு எதிரில் மிகவும் கடினமானவரும் ஆவீர்கள். தாங்கள் (ரலி) நீதியுடன் தீர்ப்பு வழங்குகின்றீர்கள். செல்வத்தை பங்கிட்டு கொடுக்கும்போது எவருக்கும் முன்னுரிமை வழங்குவதில்லை.

அதற்கு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நிறுத்துங்கள். ஸயீதே! நிறுத்துங்கள். அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவானாக! செல்லுங்கள். சென்று போருக்கு செல்வதற்கு தயாராகுங்கள். நான் சிரியாவில் இருக்கும் முஸ்லிம்களிடம் ஒரு படையை அனுப்ப உள்ளேன். அந்தப் படைக்கு நான் உம்மை அமீராக ஆக்குகின்றேன்.

பின்னர், இதனை நீங்கள் மக்களிடம் அறிவித்துவிடுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். முஸ்லிம்களே! ஹஸ்ரத் ஸயீத் பின் ஆமிர் பின் ஹிஸ்யம் (ரலி) அவர்களுடன் சிரியா போருக்கு செல்வதற்கு தயாராகுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்களும் அறிவித்துவிட்டார்கள். சில நாட்களில், அன்னாருடன் எழநூறு நபர்கள் தயாராகிவிட்டனர். ஹஸ்ரத் ஸயீத் (ரலி) அவர்கள் புறப்பட எண்ணம் கொண்டபோது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி,கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! நான் எனது நஃப்ஸின் உரிமையாளனாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், பயனளிக்கும் பொருளுக்காக இடம் பெயர்வதற்கும் தாங்கள் அல்லாஹ்விற்காக என்னை விடுவித்தீர்கள். எனவே, நான் எனது இறைவனின் வழியில் ஜிஹாத் செய்வதற்கு எனக்கு அனுமதி நல்குங்கள். அமர்ந்திருப்பதை காட்டிலும் ஜிஹாத் செய்வது எனக்கு அதிக விருப்பதற்குரியதாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் சாட்சியாவான். நான் அவனுக்காகவே உம்மை விடுதலை செய்திருந்தேன். நான் அதற்கு பகரமாக எவ்வித நற்கூலி மற்றும் நன்றியையும் உம்மிடம் வேண்டவில்லை. இந்த பூமி மிகவும் பரந்துபட்டதாகும். எனவே, நீர் எந்த வழியை விரும்புவீரோ அதன் வழி நடப்பீராக.

ஹஸ்ரத் பிலால் (ரலி) கூறினார்கள்: சித்தீக் (ரலி) அவர்களே! அநேகமாக தாங்கள் எனது கூற்றை தவறாக புரிந்துள்ளீர்கள். மேலும். தாங்கள் என்னிடம் கோபம் கொண்டுள்ளீர்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நான் இந்த விஷயத்தால் அதிருப்தி கொள்ளவில்லை. எனது விருப்பத்தின் காரணமாக, உமது விருப்பத்தை நீர் கைவிடக்கூடாது என்றே நான் விரும்புகிறேன். ஏனெனில் உமது விருப்பம் அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதின் பக்கம் அழைக்கிறது. நீங்கள் விரும்பினால், நான் உங்களுடனேயே தங்கிவிடுகிறேன் என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, உமது விருப்பம் ஜிஹாது செய்யவேண்டும் என்றிருந்தால், உங்களை (என்னுடன்) தங்கும்படி நான் ஒருபோதும் கட்டளையிட மாட்டேன். பாங்கு கொடுப்பதை மட்டுமே நான் உம்மிடம் எதிர்பார்க்கின்றேன். பிலாலே! உமது பிரிவால் நான் அதிர்வை உணர்கிறேன்.

இது எப்படிபட்ட பிரிவு என்றால், இதன் பிறகு, கியாமத் வரை (நாம்) சந்திக்க முடியாது. பிலாலே! நீர் நற்செயல் செய்து கொண்டிருப்பீராக! அந்த நற்செயல்கள் உலகிலிருந்து உமக்கான வழிப்பாதை உணவாக இருக்கட்டும். நீர் உயிருடன் இருக்கும்வரை அல்லாஹ் அதன் காரணமாக உமது நினைவை எஞ்சியிக்கச் செய்வான். நீர் மரணமடைந்துவிடும்போது, அல்லாஹ் அதற்கு சிறந்த நற்கூலியை வழங்கிவிடுவான்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இந்த நண்பர் மற்றும் சகோதரர் சார்பாக தங்களுக்கு


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நற்கூலியை வழங்குவானாக. இறைவன் மீது ஆணையாக! தாங்கள் எங்களுக்கு அல்லாஹ்விற்கு கட்டுப்படுதல், பொறுமை, உண்மை மற்றும் நற்செயல்களில் நிலைத்திருப்பதற்கு வழங்கியிருக்கும் கட்டளை என்பது ஒருபோதும் புதிய விஷயம் அல்ல. நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பிறகு,வேறு எவருக்காகவும் பாங்கு கொடுக்க விரும்பவில்லை.

பின்னர், ஹஸ்ரத் ஸயீத் பின் ஆமிர் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் புறப்பட்டு சென்றுவிட்டார்கள். (அல் இக்திஃபா பிமா தஸ்மினாஃ மிக் மகாஸி ரஸூலுல்லாஹ், தொகுதி2, பாகம்1, பக்கம் 130-132, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1997)

நான் பாங்கு கொடுப்பதற்காக மட்டும் இங்கு தங்கி இருக்க வேண்டும் என்றால் நான் பாங்கு கொடுக்கக் கூடாது என்பதுதான் எனது விருப்பம் ஆகும் என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணித்திற்குப் பிறகு, வேறு ஒருவருக்காக நான் பாங்கு கொடுப்பதை எனது உள்ளம் ஏற்கவில்லை என்ற கோரிக்கையையும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் முன்வைத்தார்கள். இதன் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இன்னும் அதிகமான மக்கள் ஒன்றுதிரண்டுவிட்டனர். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களை அவர்களுக்கு அமீராக்கினார்கள். மேலும், அன்னாரது சகோதரர் ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்களை சென்று சந்திக்கும்படி அன்னாருக்கு கட்டளை வழங்கினார்கள். ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் புறப்பட்டுச் சென்று ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் (ரலி) அவர்களை கடந்து சென்றபோது, அன்னாரின் படையின் எஞ்சியப் பகுதியும் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களுடன் இணைந்து கொண்டது. (தாரீகுத் தபரி பாகம் 2, பக்கம் 333, தாருல்குதுபில் இல்மியா பெய்ரூத், லெப்னான் 2012)

பின்னர், ஹம்ஸா பின் ஹம்ஸானி ஒரு படையை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அந்தப் படையின் எண்ணிக்கை ஓராயிரம் அல்லது அதையும் விட அதிகமானதாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களின் எண்ணிக்கை மற்றும் தயாரிப்புகளைக் கண்டபோது, மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் கூறினார்கள்:

முஸ்லிம்களின் மீது அல்லாஹ் செய்த கருணைக்காக நான் அல்லாஹ்வை மேலும் புகழ்கிறேன். எல்லாப் புகழும் அவனுக்கே உரியன. அல்லாஹ் எப்போதும், இந்த மக்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு உதவி செய்து அவர்களின் நிம்மதிக்கான ஏற்பாட்டை செய்து வருகின்றான். இவர்கள் மூலமாக அல்லாஹ் முஸ்லிம்களின் பின்பக்கத்தை வலிமைபடுத்துகின்றான். மேலும் அவர்களின் எதிரிகளின் இடுப்பை ஒடித்து வைத்துவிடுகிறான்.

பின்னர், உங்களைத் தவிர்த்தும் வேறு ஒருவர் எனக்கு அமீராக இருப்பாரா? என்று ஹம்ஸா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்டார். அதற்கு, ஆம்! நாம் மூன்று அமீர்களை நியமித்திருக்கின்றோம். நீர் அவர்களில் யாரை விரும்புவீரோ அவரிடம் சென்று இணைந்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள்.

பின்னர், ஹம்ஸா அவர்கள் முஸ்லிம்களை சென்று சந்தித்தபோது, இந்த அமீர்மார்களில் எந்த அமீர் சிறந்தவர்? மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழமையின் அடிப்படையில் சிறந்தவர் யார்? என்று அவர்களிடம் விசாரித்தார். அப்போது, ஹஸ்ரத் அபூஉபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆவார் என்று அவருக்கு கூறப்பட்டது. எனவே, அவர் அன்னாரிடம் சென்று இணைந்து கொண்டார். எவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தாரோ நான் அவருடன் இருக்கவேண்டும் என்ற அவர்களின் இந்த உணர்வு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மீதான அன்பின் வெளிப்பாடாக இருந்தது. ஜிஹாத் குழுக்களின் வருகையின் தொடர் மதீனாவில் நீண்டு கொண்டு சென்றது. மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அந்த மக்களை போர்களில் அனுப்பி வைத்து வந்தார்கள்.

மற்றொரு பக்கம், ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் தொடர்ந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எழுதி வந்தார்கள். ரோமானியர்களும், அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் கோத்திரங்களும் முஸ்லிம்களுடன் போர் புரிவதற்காக, பெரும் எண்ணிக்கையில் ஒன்று கூடி வருகின்றார்கள். எனவே, இந்த சந்தர்ப்பத்தில் நான் என்ன செய்ய வேண்டும்? என்று எனக்கு வழிகாட்டுங்கள் என அன்னார் (ரலி) அவர்கள் எழுதியிருந்தார்கள். (அல் இக்திஃபா பிமா தஸ்மனஃ மின் மகாஸி ரஸூலுல்லாஹ் தொகுதி 2, பாகம் 1, பக்கம் 133-136, ஆலமுல் குதுப் பெய்ரூத் 1997)

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடமிருந்து தொடர்ந்து கிடைத்து வந்த கடிதத்தின் காரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை சிரியாவிற்கு அனுப்புவதற்கு முடிவெடுத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக, ரோமானியர்களை அவர்களின் ஷய்த்தானிய சந்தேகங்களிலிருந்து காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மூலமாக நான் அகற்றிவிடுவேன். ஹஸ்ரத் காலித் (ரலி) அந்த நேரத்தில் ஈராக்கில் இருந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு சிரியாவிற்கு செல்லும்படியும், அங்குள்ள இஸ்லாமியப் படைக்கு தலைமை ஏற்பதற்கும் கட்டளை வழங்கிய அதே நேரம், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள்:

அம்மா பஃது! சிரியாவில் எதிரிகளுடன் போர் புரிவதற்கான தலைமைப் பொறுப்பை நான் காலித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். நீங்கள் அதனை எதிர்க்கக் கூடாது. அவரின் கூற்றை செவிமடுக்க வேண்டும். மேலும், அவரின் கட்டளையை செயல்படுத்த வேண்டும். எனது பார்வையில் நீர் அன்னாரை விட சிறந்தவர் இல்லை என்பதால் நான் அவரை உமக்கு அமீராக நியமிக்கவில்லை. ஆயினும், எனது கருத்தின்படி அன்னாரிடம் போரின் நிபுணத்துவம் உள்ளது. (அது) உம்மிடம் இல்லை. எமக்கும், உமக்கும் அல்லாஹ் நன்மையையே நாடுவானாக.

(அல் இக்திஃபா பிமா தஸ்மனஃ மின் மகாஸி ரஸூலுல்லாஹ் தொகுதி 2, பாகம் 1, பக்கம் 148, ஆலமுல் குதுப் பெய்ரூத் 1997)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஈராக்கிலிருந்து, சிரியாவிற்கு புறப்பட்டது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது:

அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கடிதம் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. 800 அல்லது 600 அல்லது 500 அல்லது ஆயிரக்கணக்கில் அந்தப் படையின் எண்ணிக்கை இருந்தது. 9000 வரை இருந்ததாகவும் அல்லது 6000 வரை இருந்ததாகவும் அறிவிப்புகளில் உள்ளது.இந்த கூட்டத்தை அழைத்துக் கொண்டு அன்னார்(ரலி) அவர்கள் சிரியாவிற்கு புறப்பட்டுவிட்டார்கள்.

சில அறிவிப்புகளில் (படையினரின் எண்ணிக்கை) நூற்றுக்கணக்கிலும், சிலவற்றில் ஆயிரக்கணக்கிலும் (எண்ணிக்கை) குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் குராகிர் என்ற இடத்தை அடைந்தபோது, அன்னார் (ரலி) அவர்கள் அங்கிருந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். பின்னர் அங்கிருந்து பாலைவனத்தை கடந்து சென்றவாறு, மிகவும் கடினமான பயணத்தை மேற்கொண்ட பிறகு, தனது கருமை நிறக் கொடியை பறக்கவிட்டவாறு டமாஸ்களிற்கு அருகில் இருந்த ஸனிய்யதுல் உகாப் என்ற இடத்தை அடைந்தார்கள்.

இது தொடர்பாகவும், இந்தக் கொடி தொடர்பாகவும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களின் கொடியாக இருந்தது. அதன் பெயர் உகாப் ஆகும். இந்தக் கொடியின் காரணமாக அந்த இடத்தின் பெயர் ஸனிய்யதுல் உகாப் என்று ஆகிவிட்டது.

(அல் காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 256-258, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006) (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், மொழிபெயர்ப்பாளர்-ஷேக் முஹம்மது அஹ்மது பானிபதீ பக்கம் 350, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர்ஸ் லாஹூர் 2004)

இதன் பிறகு, டமாஸ்கஸின் கிழக்குப் பக்க நுழைவாயிலிருந்து ஒரு மைல் தொலைவில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தங்கினார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை அன்னார் (ரலி) அங்குதான் சந்தித்தார்கள் என்றும், உள்ளபடியே அந்த நாளிலிருந்தே எதிரியை முற்றுகையிடுகின்ற பணியும் ஆரம்பமானது என்றும் சில அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு சில அறிவிப்புகளில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸிற்கு முன்பு அதிக நாட்கள் வரை தங்கவில்லை. மாறாக, (அங்கிருந்து) முன்னேறிச் சென்று கானிதி புஸ்ரா என்ற இடத்தை அடைந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுடன் புஸ்ராவை வந்தடைந்தபோது, அனைத்துப் படைகளும் அங்கு ஒன்றுதிரண்டு விட்டன. அனைவரும் அங்கு நடைபெறும் போரில் அன்னாரை தங்களது அமீராக்கிக் கொண்டனர். அவர்கள் நகரத்தை முற்றுகையிட்டனர்.

சிலர் கூறுகின்றனர்: இந்தப் போரின் தலைவராக ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஏனெனில் அது அங்கு செயல்பாட்டில் இருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் அதன் கவர்னராகவும், தலைவராகவும் இருந்தார்கள். நாம் முஸ்லிம்களுக்கு ஜிஸ்யா கொடுப்போம். முஸ்லிம்கள் தங்களின் உயிர்கள், உடைமை மற்றும் தங்களின் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குவார்கள் என்ற விஷயத்தில் சமாதானம் செய்து கொண்டார்கள். (ஃபுதூஹுல் பல்தான் லில் பலாஸரி பக்கம் 174, மொழியாக்கம் அபூல் கைர் மவ்தூதி, நஃபீஸ் அகாடமி லாஹூர் 1986) (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், மொழிபெயர்ப்பாளர்-ஷேக் முஹம்மது அஹ்மது பானிபதீ பக்கம் 351, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர்ஸ் லாஹூர் 2004).

அடுத்தப் போர் அஜ்னாதைன் அல்லது அஜ்னாதீன் ஆகும். இரண்டு பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. இது குறித்து எழுதப்பட்டுள்ளது:

அது பாலஸ்தீனத்தின் புறநகர்ப் பகுதிகளிலுள்ள பிரபலமான ஓர் இடத்தின் பெயர் ஆகும்.

(முஃஜமுல் பல்தான், தொகுதி 1, பக்கம் 129, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

புஸ்ராவின் வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி), ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) ஆகியோரை உடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் உதவிக்காக பாலஸ்தீனத்திற்கு புறப்பட்டுவிட்டார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அந்தநேரத்தில் பாலஸ்தீனத்தின் தாழ்நிலங்களில் தங்கியிருந்தார்கள். அன்னார், இஸ்லாமியப் படைகளுடன் வந்து இணைந்து கொள்ள விரும்பினார்கள். ஆனால், ரோமானியப் படை அன்னாரை பின் தொடர்ந்து கொண்டிருந்தது. அன்னாரை போர் புரியும்படி நிர்பந்திக்கும் முயற்சியில் அவர்கள் இருந்தனர். ரோமானியர்கள் முஸ்லிம்களின் வருகையைக் குறித்து கேள்விப்பட்டதும், அங்கிருந்து சென்றுவிட்டனர். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் அஜ்னாதைனை நோக்கி விலகி சென்றுவிட்டனர். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் இஸ்லாமியப் படைகளைப் பற்றி கேள்விப்பட்டதும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னார் இஸ்லாமியப் படையுடன் சென்று இணைந்து கொண்டார்கள். பின்னர், அனைவரும் அஜ்னாதைன் என்ற இடத்தில் ஒன்று திரண்டுவிட்டனர். மேலும், ரோமானியர்களுக்கு முன்னால் அணிவகுத்து நின்றனர்.

(தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 346-347, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1987)

மற்றோர் அறிவிப்பிலும் வருகிறது. அந்த அறிவிப்பிற்கேற்ப, அஜ்னாதைன் செல்வதற்கு முன்னர், ஹஸ்ரத் காலித் (ரலி), புஸ்ராவிற்கு பகரமாக டமாஸ்கஸை முற்றுகையிட்டு இருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபூஉபைதா(ரலி) அவர்களும் அன்னாருடன் உடன் இருந்தார்கள். இந்த முற்றுகையின்போது, ஹிர்குல் டமாஸ்கஸ் வாசிகளின் உதவிக்காக மேலும் ஒரு படையை அனுப்பினான். அந்த படையுடன் முஸ்லிம்களின் மோதல் நிகழ்ந்தது. அது டமாஸ்கஸின் வெற்றி குறித்த குறிப்பில் எடுத்துரைக்கப்படும். (முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், பக்கம் 379-380, புக் கார்னர் ஷோரூம் ஜஹ்லம்)

எவ்வாறு இருப்பினும், டமாஸ்கஸின் முற்றுகையின்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) ஆகியாருக்கு இந்த விஷயம் தெரிய வந்தது. அதாவது, ஹிம்ஸின் ஆட்சியாளன், அந்தநேரத்தில் புஸ்ராவில் இருந்த ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்களின் வழிப்பாதையை அடைப்பதற்காக ஒரு படையை ஒன்றுகூட்டியுள்ளான். மேலும், ரோமானியர்களின் ஒரு பெரும் படை அஜ்னாதைன் எனும் இடத்தில் களமிறங்கியுள்ளது. இந்த தகவல் ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) ஆகியோரை கவலையடையச் செய்துவிட்டது. ஏனெனில், அந்நேரத்தில் அவர்கள் டமாஸ்கஸ் வாசிகளுடனான போரில் மும்முரமாக இருந்தனர். எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) ஆகியோர் தங்களுக்கிடையில் பரஸ்பரம் ஆலோசனை செய்தனர். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எனது ஆலோசனை என்னவென்றால், நாம் இங்கிருந்து சென்றுவிடுவோம். மேலும் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) வரை சென்றடைந்துவிடுவோம். அப்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) கூறினார்கள்: நாம் ஹஸ்ரத் ஷுரஹ்பீலை நோக்கிச் சென்றுவிட்டால், பின்னர் அஜ்னாதைனில் உள்ள ரோமானியப் படை நம்மை பின் தொடரும். எனவே, எனது ஆலோசனை என்னவென்றால், நாம் அஜ்னாதைனில் உள்ள அந்த பெரும் படையை நோக்கிச் செல்வோம். மேலும், ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பிவிடுவோம். அன்னாருக்கு எதிரிகளின் நடமாட்டத்தைக் குறித்து அறிவித்துவிடுவோம். மேலும், அஜ்னாதைனில் நம்மோடு வந்து இணைந்து கொள்ளும்படி அவரிடம் கூறிவிடுவோம். அதேபோன்று, நாம் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அம்ர் (ரலி) ஆகியோரையும் அஜ்னாதைனில் வந்து நம்மோடு இணைந்து கொள்ளும்படி அவர்களுக்கு தூது அனுப்பிவிடுவோம். பின்னர் நாம் நமது எதிரியுடன் மோதுவோம்.

அப்போது, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது மிகவும் சிறந்த ஆலோசனை ஆகும். அல்லாஹ் இதில் பரக்கத் செய்வானாக. அதன்படி செயல்படுங்கள்.

ஓர் அறிவிப்பிற்கேற்ப, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கினார்கள். அதாவது, நமது படை சிரியாவின் பல்வேறு இடங்களில் சிதறுண்டு உள்ளது. எனவே, அவர்கள் அனைவரும் அஜ்னாதைனில் நம்மோடு வந்து இணைந்து கொள்வதற்கு அவர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதுங்கள்.

ஆக, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸிலிருந்து, அஜ்னாதைன் நோக்கிச் செல்வதற்கு

எண்ணம் கொண்டார்கள். அப்போது, அனைத்து அமீர்மார்களுக்கும், கடிதம் எழுதி அஜ்னாதைனில் ஒன்று கூடும்படி வழிகாட்டல் வழங்கினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களும் அந்த மக்களை அழைத்துக் கொண்டு டமாஸ்கஸின் முற்றுகையை விட்டுவிட்டு, அஜ்னாதைன் வாசிகளை நோக்கி விரைவாக புறப்பட்டுவிட்டார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் படையின் பின்பக்கப் பகுதியில் இருந்தார்கள். டமாஸ்கஸ் வாசிகள் பின்தொடர்ந்து வந்து ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை பிடித்துவிட்டனர். மேலும், அன்னாரை சுற்றிவளைத்து விட்டனர். அன்னார் (ரலி) 200 நபர்களுடன் இருந்தார்கள். உண்மையில், அந்தக் குழு பெண்கள், குழந்தைகள், செல்வம் மற்றும் இதரப் பொருட்களைக் கொண்ட குழுவாக இருந்தது.

ஓர் அறிவிப்பிற்கேற்ப, அவர்களின் கண்காணிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஓராயிரம் சவாரிகளும் இருந்தனர். அதேநேரம், டமாஸ்கஸ் வாசிகள் மாபெரும் எண்ணிக்கையில் இருந்தனர்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள், அந்த மக்களுடன் கடுமையாக சண்டையிட்டார்கள். இது குறித்த தகவல், சவாரிகளுடன் படையின் முன்பகுதியில் இருந்த ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கிடைத்தவுடன் அன்னார் (ரலி) அவர்கள், திரும்பி வந்தார்கள். மேலும், அன்னார் (ரலி) அவர்களுடன் இருந்த ஏனைய மக்களும் திரும்பி வந்தனர். பின்னர், சவாரிகளில் இருந்தவர்கள் ரோமானியர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மேலும், அவர்களை ஒருவர் மற்றவர் மீது விழச் செய்தவாறு, மூன்று மைல் தொலைவு வரை பின்வாங்கச் செய்து விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் மீண்டும் டமாஸ்கஸில் நுழைந்துவிட்டார்கள்.

மற்றோரு பக்கம், அஜ்னாதைனில் தங்கியிருந்த ரோமானியப் படை தனது மற்றொரு படைக்கு கடிதம் அனுப்பியது. அஜ்னாதைனிற்கு வரும்படி அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கியது. ரோமானியர்களின் அந்தப் படை ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன் புஸ்ராவை நோக்கி சென்று கொண்டிருந்தது. அதேபோன்று, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் வழிகாட்டல்படி, அனைத்து இஸ்லாமியப் படைகளும் அஜ்னாதைனில் ஒன்றுகூடிவிட்டன. (தாரீகுல் குமைஸ் தொகுதி 3, பக்கம் 228-230, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2009)

ரோமானியப் படைத் தளபதிகள் முஸ்லிம்களுக்கு சிலவற்றை கொடுத்து திருப்பி அனுப்பி வைக்க விரும்பினர். ஏனெனில், ஈரானியர்களைப் போன்று அவர்களின் எண்ணமும் இதுவாகவே இருந்தது. அதாவது, இந்த முஸ்லிம்கள் பட்டினி கிடப்பவர்கள். ஆடை இல்லாதவர்கள். தமது ஏழை நாட்டிலிருந்து கொள்ளையடித்து செல்வதற்காக புறப்பட்டுள்ளனர்.

பல நூற்றாண்டுகள் வரை நாகரீகமற்றவர்களாக, அறிவீனர்களாக, ஏழைகளாக மற்றும் ஆயுதமற்றவர்களாக இருந்த பாலைவன வாசிகளான அரேபியர்களிடம் வேறு எந்த ஓர் உயர்வான நோக்கத்தையும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

ஆக, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதாவது, முஸ்லிம்களின் படை திரும்பி சென்றுவிட்டால், பின்னர் ஒவ்வொரு போர்வீரருக்கும் ஒரு தஸ்தார் (ஒரு ஜோடி) ஆடையும், ஒரு வளையலும் கொடுக்கப்படும். சிப்பாய்களுக்கு பத்து ஜோடி ஆடைகளும், நூறு தலாயி தீனார்களும், கலீஃபாவிற்கு ஒரு நூறு ஜோடி ஆடைகளும், ஓர் ஆயிரம் தினார்களும் கொடுக்கப்படும்.

ஆக, இவர்கள் கொள்ளையர்கள், திருடர்கள். இவர்களுக்கு இவ்வளவு கொடுத்து அனுப்பி வைத்துவிடுங்கள் என்றே அவர்கள் கூறினர். இதைக் கேட்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டார்கள். மேலும், மிகவும் கடுமையான சொற்களில் கூறினார்கள்:

ரோமானியர்களே! நாங்கள் உங்களது தருமத்தை ஏளனத்துடன் நிராகரிக்கின்றோம். ஏனெனில், நாங்கள் விரைவிலேயே உங்களது செல்வம், உடைமை, உங்களது கோத்திரம் மற்றும் உங்களுக்கு எஜமானர்களாக ஆகிவிடுவோம்.

(பஷீர் ஸாஜித் அவர்களின் அஷரஃ முபஷ்ஷீரா பக்கம் 156-157 அல்பத்ர் பப்ளிகேஷன்ஸ் லாஹூர்)

இரண்டு படைகளும் அருகில் நெருங்கியபோது, ரோமானியர்களின் ஒரு தலைவர் ஓர் அரேபிய நபரை அழைத்து நீர் முஸ்லிம்களுடன் இணைந்து விடு என்று கூறினார்.

அந்த அரேபியர் முஸ்லிமாக இருக்கவில்லை.

அவர்களுடன் நீர் ஒரு பகலும் இரவும் தங்கியிரு. பின்னர் என்னிடத்தில் அவர்களின் செய்தியை கொண்டு வா என்றும் கூறினார். அந்த நபர் மக்களில் நுழைந்து விட்டார். அவர் அரேபியராக இருந்த காரணத்தால், எவரும் அவரை அந்நியராக கருதவில்லை. அவர் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒரு பகலும், ஓர் இரவும் தங்கியிருந்தார். பின்னர் அந்த ரோமானிய தலைவரிடம் அவர் திரும்பி வந்தார். அப்போது, என்ன தகவல் கொண்டு வந்துள்ளீர்? என்று அவர் கேட்டார்.

அதற்கு அந்த நபர் கூறினார்: நீங்கள் என்ன செய்தி என்று கேட்டால், செய்தி இதுதான். அதாவது, (முஸ்லிம்களாகிய) இவர்கள் இறை வணக்கம் செய்யக்கூடியவர்கள். இரவில் இறை வணக்கம் செய்கின்றனர். பகலில் போர் வீரர்கள். தங்களுக்கு மத்தியில் நீதியை நிலைநாட்டுவதற்காக, ஒருவேளை அவர்களின் அரசனின் மகன் திருடினாலும் கூட அவரின் கையை வெட்டிவிடுகின்றனர். ஒருவேளை விபச்சாரம் செய்தால் அவரை கல் எறிந்து கொன்றுவிடுகின்றனர்.

ரோமானியத் தலைவர் கூறினார்: நீர் என்னிடம் உண்மையைக் கூறிக் கொண்டிருக்கின்றீர் என்றால், பூமியின் மட்டத்தில் அவர்களுடன் மோதுவதைக் காட்டிலும் பூமிக்குள் சென்றுவிடுவது சிறந்ததாகும். எனவே நான் விரும்புகிறேன். அல்லாஹ் என் மீது இந்த அளவு அருள் செய்யட்டும். அதாவது, என்னையும், அவர்களையும் அவரவர் நிலைகளில் விட்டுவிடட்டும். அவர்களுக்கு எதிராக எனக்கும் உதவி செய்ய வேண்டாம். மேலும், எனக்கும் எதிராக அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டாம்.

(தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 347, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

தாரீகே தபரியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

எவ்வாறு இருப்பினும், காலை நேரத்தில் மக்கள் ஒருவர் மற்றவருக்கு அருகில் வந்தனர். அப்போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் வெளியேறி, படையை ஒழுங்குபடுத்தினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில், அவர்களுக்கு ஜிஹாதிற்கு எழுச்சியூட்டியவாறு சென்று கொண்டிருந்தார்கள். மேலும் ஓரிடத்தில் அன்னார் நிற்கவில்லை. மேலும் அன்னார் முஸ்லிம் பெண்களுக்கு இவ்வாறு கட்டளை வழங்கினார்கள்:

நீங்கள் வலிமையுடன் நிலை நில்லுங்கள். மேலும் மக்களுக்கு பின்னால் நின்று கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வை அழையுங்கள். அவனிடமே முறையிட்டு வாருங்கள். முஸ்லிம்களில் ஒருவர் உங்களை கடந்துசென்றால், நீங்கள் உங்களது பிள்ளைகளை அவர்களின் பக்கம் உயர்த்திக் காட்டுங்கள். மேலும், நீங்கள் உங்களது பிள்ளைகள் மற்றும் பெண்களை பாதுகாப்பதற்காக போர் புரியுங்கள் என்று அவர்களிடம் கூறுங்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒவ்வொரு படைப் பிரிவின் பக்கமும் நின்றவாறு, கூறினார்கள்:

அல்லாஹ்வின் அடியார்களே, அல்லாஹ்வின் தக்வாவை மேற்கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வை நிராகரித்தவர்களுடன் அல்லாஹ்வின் வழியில் போர் செய்யுங்கள். மேலும், நீங்கள் புறமுதுகு காட்டி ஓடிவிடாதீர்கள். நீங்கள் உங்களது எதிரிக்கு அஞ்ச வேண்டாம். மாறாக, நீங்கள் சிங்கங்களைப் போன்று, முன்னேறிச் செல்லுங்கள். எந்த

அளவுக்கு என்றால், அச்சம் விலகிவிடவேண்டும். நீங்கள் சுதந்திரமானவர்களும், கண்ணியம் மிக்கவர்களும் ஆவீர்கள். உங்களுக்கு உலகமும் கொடுக்கப்பட்டுள்ளது. மறுமைக்கான கூலியும் அல்லாஹ்வின் வசம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீங்கள் காணும் எதிரியின் மிகுதியான எண்ணிக்கை உங்களை அச்சத்தில் ஆழ்த்தி விட வேண்டாம். நிச்சயமாக, அல்லாஹ் தனது தண்டனையையும், ஆக்கினையையும் இறக்கக் கூடியவன் ஆவான்.

நான் தாக்குதல் தொடுக்கும்போது நீங்களும் தாக்குதல் தொடுத்துவிடுங்கள் என்று, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மக்களிடம் கூறினார்கள்.

(தாரீகுல் குமைஸ் தொகுதி 3, பக்கம் 230-231, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2009)

இதன் பிறகு, இரண்டு படைகளுக்கிடையிலும் கடுமையான போர் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஸயீத் பின் ஸைத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கி எழுச்சியூட்டினார்கள்:

மக்களே! அல்லாஹ்வின் முன் உங்களது மரணத்தை நினைவிற் கொள்ளுங்கள். போரிலிருந்து தப்பியோடி நரகத்திற்குரியவர்களாக ஆகிவிடாதீர்கள். மார்க்கத்தை பாதுகாக்கக் கூடியவர்களே, மேலும் திருக்குர்ஆனை ஓதக் கூடியவர்களே, பொறுமையுடன் செயல்படுங்கள்.

போர் நிகழ்ந்தபோது, அதுவும் கடுமையான போர் நிகழ்ந்தபோது ரோமானியர்கள் தப்பியோடி தங்களது உயிரை காப்பாற்றிக் கொண்டனர். அவர்கள் தங்களது இடத்தை சென்றடைந்தபோது, வர்தான் தமது சமுதாயத்திற்கு முன்னால் இவ்வாறு சொற்பொழிவு நிகழ்த்தினான். அவன் கூறினான்:

ஒருவேளை இதே நிலை நீடித்தால் இந்த நாடும், செல்வமும் உங்களது கைகளிலிருந்து பறிபோய்விடும். இனியாவது நீங்கள் உங்களது உள்ளத்திலுள்ள கறைகளை கழுவிவிடுவது சிறந்ததாகும். இந்த மேய்ப்பாளர்கள், பட்டினியில் கிடக்கக் கூடிய, ஆடையற்ற இந்த அடிமைகள் நம்முடன் போர் புரிவார்கள் என்று நாம் எண்ணிக் கூட பார்த்ததில்லை. பஞ்சமும். வறட்சியும் இவர்களை நம் பக்கம் அனுப்பி வைத்துள்ளது. தற்போது, இவர்கள் இங்கு வந்து பழங்கள் உண்டனர். கனிகளை உண்டனர். மைதாவுக்குப் பகரமாக கோதுமை ரொட்டியை உண்டுள்ளனர். இவர்கள் தேன் அருந்திக் கொண்டிருக்கின்றனர். அத்திப் பழமும், திராட்சைப் பழமும், மேலும் நல்ல பல பொருட்களின் சுவையையும் இவர்கள் ருசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அடுத்து, அவர்கள் சில தலைவர்களிடம் கருத்துக் கேட்டனர். அப்போது, ஒரு தலைவர் இவ்வாறு ஆலோசனைக் கூறினார்: நீங்கள் முஸ்லிம்களை தோற்கடிக்க விரும்பினால், நீங்கள் அவர்களின் அமீரை ஏதாவது சூழ்ச்சி செய்து, ஏமாற்றி அழைத்து வந்து கொன்றுவிடுங்கள். அந்நிலையில் மற்றவர்கள் ஓடிவிடுவார்கள்.

முதலில், சமுதாயத்தின் பத்து போர்வீரர்களை ஒளிந்து அமர்ந்திருப்பதற்காக அனுப்புங்கள். பின்னர், முஸ்லிம்களின் அமீரை தன்னந்தனியாக பேச்சு வார்த்தைக்காக அழையுங்கள். அவர் தனியாக பேச்சுவார்த்தை நடத்தும் எண்ணத்துடன் வரும்போது, மறைந்திருக்கும் போர்வீரர்கள் தாக்குதல் நடத்தி அவரைக் கொன்றுவிடட்டும்.

ஆக, ரோமானியர்களின் அமீர் ஒரு பேச்சாற்றல் மிக்க நபரை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் அனுப்பினான். தூதுவர் முஸ்லிம்களை சென்றடைந்தபோது, மிகவும் சப்தமாக குரல் கொடுத்தார். முஸ்லிம்களே! நீங்கள் இரத்தம் சிந்துவதையும், கொலைகளையும் நிறுத்த மாட்டீர்களா? நாங்கள் சமாதானத்திற்கான திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். எனவே, என்னுடன் பேச்சுவார்த்தைக்காக உங்களது தலைவர் முன்னால் வரட்டும். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முன்னால் வந்தார்கள். மேலும் அவரிடம் கூறினார்கள்: நீர் கொண்டு வந்துள்ள செய்தியை எடுத்துரைப்பீராக. ஆயினும் உண்மையை கருத்தில் கொள்.

அப்போது, அவர் கூறினார்:

நான் இந்த நோக்கத்திற்காக வந்துள்ளேன். அதாவது, எங்களது அமீர் இரத்தம் சிந்துவதை விரும்பவில்லை. இதுவரை கொலையுண்ட மக்களின் வேதனை அவருக்கு உள்ளது. எனவே, போரை நிறுத்துவதற்காக உங்களுக்கு சில செல்வங்களை கொடுத்து ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்பது அவரது கருத்தாகும்.

பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போது, வந்திருந்த தூதுவரின் உள்ளத்தில் அல்லாஹ் எப்படிபட்ட மதிப்பச்சத்தை ஏற்படுத்தினான் என்றால், அவர் தமது குடும்பத்தினரின் பாதுகாப்பின் உத்திரவாதத்திற்கு பகரமாக, தனது தலைவரின் அனைத்து சதித் திட்டத்தையும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு முன்னால் எடுத்துரைத்துவிட்டார். எவ்வாறு மறைந்திருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்பது பற்றி தான் அறிந்திருந்த அனைத்து சதித்திட்டத்தையும் அவர் கூறிவிட்டார்.

அப்போது, நீர் நம்பிக்கை துரோகம் செய்யவில்லையென்றால், நான் உமக்கும், உமது குடும்பத்தினருக்கும் அடைக்கலம் வழங்குகின்றேன் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் அவர் திரும்பி சென்றுவிட்டார். மேலும், ஹஸ்ரத் காலித் (ரலி) பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளார் என்று தனது தலைவரிடம் கூறினார். அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். பேச்சுவார்த்தைக்காக தீர்மானிக்கப்பட்டிருந்த இடத்தில், தனது பத்து போர்வீரர்களை குன்றுக்கு பின்னால் ஒளிந்திருந்து தாக்குவதற்கு காத்திருக்கும்படி கட்டளையிட்டான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தூதுவர் கூறியதன் அடிப்படையில் அந்த சதித் திட்டத்தை அறிந்து கொண்டிருந்தார்கள்.

ஆக, அன்னார் (ரலி), ஹஸ்ரத் ளிரார் (ரலி) அவர்களுடன் பத்து முஸ்லிம்களை எதிரிகள் ஒளிந்திருக்கும் அந்த இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். முஸ்லிம் போர்வீரர்கள் அந்த இடத்தை அடைந்து ரோமானியப் போர் வீரர்களை பிடித்துவிட்டார்கள். மேலும், அவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டு அவர்களது இடத்தில் முஸ்லிம்கள் அமர்ந்து கொண்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், ரோமானியர்களின் அமீருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சென்று விட்டார்கள். இரு தரப்பு படைகளும் முற்றிலும் ஒருவர் மற்றவருக்கு எதிராக தயாராக நின்று கொண்டிருந்தது. ரோமானிய அமீரும் அங்கு வந்தடைந்தான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியவாறு அவனிடம் கூறினார்கள்: நீர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டால், நீர் எமது சகோதரராக ஆகிவிடுவீர். இல்லையென்றால்,ஜிஸ்யா கொடு அல்லது போருக்கு தயாராகிக் கொள்.

ரோமானிய அமீர், ஒளிந்திருந்த போர்வீரர்களை நம்பிக் கொண்டிருந்தான். எனவே, அவன் திடீரென ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது வாளினால் தாக்குதல் நடத்தினான். மேலும், அன்னாரின் இரண்டு கரங்களையும் பிடித்துக் கொண்டான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும் அவன் மீது தாக்குதல் நடத்தினார்கள். ரோமானிய அமீர் தமது நபர்களுக்கு குரல் கொடுத்தான். விரைவாக ஓடி வாருங்கள். நான் முஸ்லிம்களின் அமீரை பிடித்து விட்டேன் என்று கத்தினான். குன்றுக்கு பின்னால் மறைந்திருந்த சஹாபிகள் அந்த சப்தத்தை கேட்டதும். வாளை வெளியில் எடுத்துக் கொண்டு அவனை நோக்கி ஓடினார்கள். அவர்கள் நம்மவர்கள் என்றே முதலில் வர்தான் கருதினான். ஆனால், ஹஸ்ரத் ளிரார் (ரலி) அவர்கள் மீது பார்வை பட்டதும், அவன் தன்னிலை மறந்துவிட்டான். அதன் பிறகு, ஹஸ்ரத் ளிரார் (ரலி) அவர்களும், மற்ற போர்வீரர்களும் இணைந்து அவனது கதையை முடித்துவிட்டார்கள். ரோமானியர்களுக்கு தமது அமீரின் மரண செய்தி கிடைத்தபோது அவர்கள் தைரியம்

இழந்துவிட்டார்கள்.

(மவ்லானா ஃபஸ்ல் முஹம்மது யூசுஃப் ஸயி அவர்களின் நூல்-ஃபுதூஹாதே ஷாம், பக்கம் 97-104 மக்தபா ஈமான் மற்றும் ஈகான் 2011)

இதன் பிறகு ஒருவர் மற்றவருடன் மோதிக் கொண்டனர். மேலும், போர் தொடங்கிவிட்டது. ரோமானியர்களின் மற்றொரு தலைவன் முஸ்லிம்களின் போரின் நிலவரத்தைக் கண்டபோது, எனது தலையை துணியால் கட்டிவிடுங்கள் என்று தனது மக்களிடம் கூறினான். ஏன்? என்று அவர்கள் அவனிடம் கேட்டனர். அதற்கு அவன் கூறினான்: இன்றைய நாள் மிகவும் கெட்ட நாளாகும். இதனை நான் பார்க்க விரும்பவில்லை. நான் உலகில் இன்று வரை இதுபோன்ற கடினமான நாளை கண்டதில்லை.

முஸ்லிம்கள் அவனது தலையை வெட்டியபோது, அது துணியால் கட்டப்பட்டிருந்தது என்று அறிவிப்பாளர் கூறுகின்றார்.

(தாரீகே தபரி தொகுதி 2, பக்கம் 347, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1987)

இந்தப் போரில் ரோமானியர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சமாக இருந்தது. (ஃபுதூஹுல் பல்தான் லி இமாம் அபீ அல் ஹஸன் அல்பல்ஸாரி பக்கம் 74, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2000)

முஸ்லிம்களின் எண்ணிக்கை முப்பதாயிரமாக இருந்தது. (அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்களின் நூல்- அல்கலீஃபத்துல் அவ்வல், அபூபக்ர் அஸ் ஸித்தீக் ஷக்ஸீயா வ அஸ்ரஹு பக்கம் 312, தாருல் மஃரிஃப பெய்ரூத் 2006)

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப, முப்பத்தி ஐந்தாயிரமாக இருந்தது. (பஷீர் ஸாஜித் அவர்களின் நூல் அஷரஃ முபஷ்ஷிரா பக்கம் 805,அல்பத்ர் பப்ளிகேஷன்ஸ் லாஹூர் 2000)

இந்தப் போரில், மூன்றாயிரம் ரோமானியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், தோல்வியடைந்த படையினர் ஏனைய பல்வேறு நகரங்களில் அடைக்கலம் தேடும் நிர்பந்தத்திற்கு ஆளாகினர். (தாரீகுல் குமைஸ் தொகுதி 3, பக்கம் 231, தாருல் குதுபில் இல்மியா 2009)

அஜ்னாதைன் வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு கடிதத்தின் வாயிலாக, அந்த நற்செய்தியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தெரிவித்தார்கள்.அதன் கருத்து இவ்வாறாக இருந்தது:

அஸ்ஸலாமு அலைக்கும். நான் தங்களுக்கு செய்தி வழங்குகிறேன். எங்களுக்கும், இணைவைப்பாளர்களுக்கும் போர் நிகழ்ந்தது. அவர்கள், எங்களுடன் மோதுவதற்காக அஜ்னாதைனில் ஒரு மாபெரும் படையை ஒன்றுதிரட்டி வைத்திருந்தார்கள். அவர்கள் தமது சிலுவைகளை உயர்த்திப் பிடித்திருந்தார்கள். மேலும் வேதங்களையும் உயர்த்திப் பிடித்திருந்தார்கள். மேலும் நாங்கள் (போர் மைதானத்திலிருந்து) தப்பியோட மாட்டோம். எந்த அளவுக்கு என்றால், ஒன்று நாங்கள் (முஸ்லிம்களை) அழித்துவிடுவோம் அல்லது அவர்களை எங்களது நகரத்திலிருந்து வெளியேற்றி விடுவோம் என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்திருந்தார்கள்.

நாங்களும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் வைத்து புறப்பட்டோம். பின்னர் நாங்கள் ஓரளவிற்கு அவர்களை ஈட்டியால் தாக்கினோம். மேலும், நாங்கள் வாளை வெளியே எடுத்தோம். ஓர் ஒட்டகத்தை அறுத்து பலியிட்டு தயாராக்குவதற்கு எவ்வளவு நேரம் வாள் வீசுவோமோ அவ்வளவு நேரம் அவர்கள் மீது நாங்கள் தாக்குதல் நடத்தினோம்.

பின்னர், அல்லாஹ் தனது உதவியை இறக்கினான். மேலும் தனது வாக்குறுதியை முழுமை செய்தான். மேலும், நிராகரிப்பாளர்களை தோல்வியுறச் செய்தான். மேலும், எல்லா விசாலமான பாதைகள், எல்லா நகரங்கள், எல்லா தாழ்வான பகுதிகளிலும் நாங்கள் அவர்களை மரணக் குழியில் இறக்கி விட்டோம். தனது மார்க்கத்திற்கு வெற்றி வழங்கிய, தனது எதிரிகளை இழிவுபடுத்திய மற்றும் தனது நண்பர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்ற அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் உரியது.

இந்தக் கடிதம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்னால் வாசித்துக் காட்டப்பட்டபோது, அன்னார் அந்தநேரத்தில் மரணப்படுக்கையில் இருந்தார்கள். அந்த வெற்றி அன்னார் (ரலி) அவர்களை மகிழ்ச்சிபடுத்தியது. அல்ஹம்துலில்லாஹ்! முஸ்லிம்களுக்கு உதவி செய்து எனது கண்களை குளிரச் செய்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தாரீகுல் குமைஸ் தொகுதி 3, பக்கம் 231-231, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2009)

அஜ்னாதைன் போர் எப்போது நடைபெற்றது? என்பது தொடர்பான சந்தேகமும் உள்ளது. சிலரின் பார்வையில் அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்தது. இது தொடர்பான ஒரு விளக்கமும் உள்ளது. அதனையும் கூறிவிடுகிறேன். இது எப்போது நடைபெற்றது? என்ற கேள்வி எழுவதைப் போன்று, இது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. ஓர் அறிவிப்பிற்கேற்ப இந்தப் போர் ஹிஜ்ரி 13ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்கு 24 நாட்கள் அல்லது 34 நாட்களுக்கு முன் நிகழ்ந்தது.

(தாரீகுல் குமைஸ் தொகுதி 3, பக்கம் 232, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2009)

இந்தப் போர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹிஜ்ரி 13ஆம் ஆண்டில் நிகழ்ந்தது என்று சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். (அல் காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 266, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002)

எவ்வாறு இருப்பினும், நமது ஆய்வு செய்யக்கூடிய நபர்களை, நமது ஆராய்ச்சியாளர்களை பொறுத்தவரை அஜ்னாதைன் என்ற இடத்தில் இரண்டு முறை போர் நிகழ்ந்திருக்கலாம். அதற்கே அதிக வாய்ப்பு உள்ளது.

அதாவது, முதல் முறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்திலும், இரண்டாவது முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்திலும் நிகழ்ந்திருக்கலாம். இது நம்மவர்களின் கருத்தாக உள்ளது.

இந்தக் கருத்து சரியானதாகவும் தெரிகிறது. ஏனெனில், சில வரலாற்று நூல்களில் இரண்டு சந்தர்ப்பங்களிலும் இஸ்லாமியப் படைகளைப் பற்றி தனித் தனியாக கூறப்பட்டுள்ளது. ஹிஜ்ரி 13ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் படைத் தளபதியாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) இருந்தார்கள். ஹிஜ்ரி 15ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் படைத் தளபதியாக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். எவ்வாறு இருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான்.

டமாஸ்கஸின் வெற்றிக் குறித்த விளக்கங்கள் உள்ளன. அவை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் (எடுத்துரைக்கப்படும்).

தமிழாக்கம் :

மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 29 September 2022 Issue No. 39

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

(வேறுபடுத்தி) எடுத்துரைத்து அவர் மரணித்துவிட்டார் என்பதையும் புரிய வைக்கின்றார்கள்.

இவை திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அத்தாட்சிகளாகும். இவை மட்டுமின்றி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின்போது, எல்லா நபிமார்களும் மரணித்துவிட்டனர் என்ற அனைத்து சஹாபிகளின் சாட்சியமும் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இன்னும் மரணிக்கவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும், வாள் ஏந்திக் கொண்டு நின்று கொண்டார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) எழுந்து நின்று (இந்த இறை வசனத்தை) குத்பாவில் ஓதினார்கள்.

مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوۡلٌ قَدۡ خَلَتۡ

(முஹம்மது (ஸல்) ஒரு தூதர் மட்டுமே ஆவார். அன்னாருக்கு முன் தோன்றிய அனைத்து தூதர்களும் மரணித்துவிட்டனர்). (3:145)

தற்போது, அந்த சந்தர்ப்பம் (ஒரு வகையில்) கியாமத்தின் மைதானமாகவே இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த உலகில் இருந்து பிரிந்து சென்றிருந்தார்கள். மேலும் அனைத்து சஹாபிகளும் ஒன்று கூடியிருந்தனர். எந்த அளவுக்கு என்றால், ஓசாமாவின் படையும் புறப்பட்டு சென்றிருக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் (அவ்வாறு) கூறியதன் காரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் உரத்த குரலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள் என்று கூறினார்கள். அதற்கு, مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوۡلٌ (முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார்.) என்பதிலிருந்து சான்று பகிர்ந்தார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) உயிருடன் இருக்கின்றார் என்ற சந்தேகமும், எண்ணமும் சஹாபிகளுக்கு அப்போது இருந்திருந்தால் அவர்கள் நிச்சயம் பேசியிருப்பார்கள். ஆனால், அனைவரும் மௌனமாகிவிட்டார்கள். மேலும் இந்த வசனத்தை கடைவீதிகளில் ஓதிக் கொண்டிருந்தனர். மேலும், இந்த வசனம் இன்றே இறங்கியது போன்று இருப்பதாக அந்த சஹாபிகள் கூறிவந்தனர்.

அல்லாஹ் நம்மை காப்பானாக. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மீதான மதிப்பச்சத்தால் மௌனமாகிவிடுவதற்கு சஹாபிகள் நயவஞ்சகர்களாக இருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கூற்றை மறுக்கமுடியாமல் போய்விட்டார்களா என்ன? (ஒருபோதும்) இல்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துரைத்த விஷயமே உண்மையானதாக இருந்தது. எனவே தான் (சஹாபிகள்) அனைவரும் தலை குனிந்து நின்றனர். இதுவே சஹாபிகளின் இஜ்மா (ஒருமித்தக் கருத்து) ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் வருவார்கள் என்றுதானே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கூறிவந்தார்கள். இந்த சான்று (3:145) முழுமையானதாக இல்லாமல் இருந்திருந்தால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே அதை மறுத்திருப்பார்களே!

(எவ்வித விதிவிலக்கும் இல்லாதபோதுதான் ஒரு சான்று முழுமையானதாக இருந்திருக்க முடியும். ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு சென்றிருந்தார்கள். மேலும் அன்னார் (அலை) மீண்டும் பூமிக்கு திரும்பி வருவார்கள் என்றால், பின்னர் அந்த சான்று கேலிக்குரியதாக ஆகியிருக்கும்).

* (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 397, காதியான் பதிப்பு 2018) *

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

தெளிவாகவோ அல்லது சைகையாகவோ தடுக்கப்பட்ட பொருட்களைத் தவிர மற்ற அனைத்து பொருட்களும் மனிதனுக்கு ஆகுமானதாக ஆகிவிட்டது.

இந்த வசனத்தில், அல்லாஹ் لَحۡمُ الۡخِنۡزِيۡرِ (பன்றியின் இறைச்சி) என்று கூறியுள்ளான். இறைச்சியில் கொழுப்பும் அடங்குமா? அடங்காதா? என்பது தொடர்பாக மார்க்க சட்ட வல்லுநர்களுக்கிடையில் கருத்துவேறுபாடு உள்ளது. அகாராதியைப் பொருத்தவரை, شَحۡم அதாவது, கொழுப்பு لَحۡم (இறைச்சியி)லிருந்து தனித்த ஒன்றாக கருதப்படுகிறது. ஆனால், திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர்: லஹ்மில் (இறைச்சியில்) ஷஹ்மும் (கொழுப்பும்) அடங்கும். திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் வாதம் ரசனையாக இருந்தாலும், மொழி அகராதி வல்லுநர்களின் கருத்து இந்த விவகாரத்தில் அதிகம் நம்பகத்தன்மை கொண்டதாக உள்ளது. ஆனால், அவ்வாறு இருந்தாலும் கூட என்னைப் பொருத்தவரை பன்றியின் கொழுப்பு ஆகுமானதல்ல.

என்னிடத்தில் உள்ள அதற்கான சான்று இதுவாகும். அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மரணித்த விலங்குகளின் கொழுப்பு ஹராம் ஆகும். பன்றியின் விலக்கலும், மரணித்தவைகளின் விலக்கலும், ஒரே வசனத்திலும், ஒரே சொற்களிலுமே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டிற்கான கட்டளையும் ஒரே வகையானதாக கருதப்படும். ஆயினும், பன்றியின் தோலின் பயன்பாடு ஆகுமானதாக இருக்கும். ஏனெனில் அது உண்ணப்படுவதில்லை.

ஹதீஸில் ஒரு சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் உம்மே ஸல்மா (ரலி) அவர்களின் ஓர் ஆடு இறந்துவிட்டது. சில நபர்கள் ஒன்று சேர்ந்து அதனை வெளியே எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த நபர்களிடம், நீங்கள் இதன் தோலை ஏன் உரிக்கவில்லை? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது مَيۡتَة (இறந்த ஒன்று) அல்லவா? என்று கூறினார்கள். அப்போது, நீங்கள் என்ன (அந்த தோலை) உண்ணவா போகின்றீர்கள்? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆக, எதன் இறைச்சி ஹராமோ அதன் தோலை பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை என்று இதிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும், பன்றியின் முடியால் தயாரிக்கப்பட்ட பிரஷ்கள் வெறுக்கத்தக்கதாக கூறப்படும். ஏனெனில், உணவிற்கான வாசலாக இருக்கும் வாயில் அவை இடப்படுகின்றன.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 260,
காதியான் பதிப்பு 2010)

* * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad